# திராவிடப் போராளிகள்

**35** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

# அழுத்தங்களை உடைத்த விடிவெள்ளி

## டாக்டர் முத்துலட்சுமி

ஓவியம் : ரவி பேலட்



**ஜா**திபேதமும் பெண்ணடிமைத்தனமும் கொண்ட சமூகத்தின் கொடிய நடைமுறைகள் எத்தனையோ, பெண்களின் திறமைகளையும் கனவுகளையும் மண்ணுக்குள் போட்டுப் புதைத்திருக்கிறது. அதே நேரத்தில் புதைத்த இடத்திலிருந்து முளைத்து மண்ணைப் பிளந்து வெளிவரும் செடியாக சமூக அழுத்தத்தை வென்று வாழும் ஆற்றல் பெற்ற வெற்றியாளர்களில் ஒருவர்தான் மருத்துவர் முத்துலட்சுமி.

1886-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30-ஆம் நாள் பிறந்த முத்துலட்சுமி அவர்களின் தாயார் பெயர் சந்திரம்மா. தேவதாசி குடும்பத்தில் பிறந்தவர். புதுக்கோட்டை மன்னர் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய நாராயணசாமி அய்யர் சந்திரம்மாவை மணக்க விரும்பினார். அவருக்கும் சந்திரம்மாவுக்கும் திருமணம் நடந்தேறியது.

தேவதாசிப் பெண்ணைத் திருமணம் செய்ததால் நாராயணசாமி அய்யரின் குடும்பத்தினர் அத்திருமணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், இளம் வயது முதல் முத்துலட்சுமிக்கு நெருக்கமாக இருந்தவர்கள், அவரது தாய்வழி உறவினர்களே. எனவே, அவர்களது வாழ்க்கை முறையை நன்கு அறியும் வாய்ப்பு முத்துலட்சுமிக்கு வாய்த்தது.

### மறைப்பு போட்டு கல்வி

கல்வி கற்பதில் நாட்டம் கொண்ட முத்துலட்சுமி தன் வயதுள்ள உறவுப் பெண்களுக்கு ஆடலும் பாடலும் மோகமூட்டும் கலைகளும் கற்றுக் கொடுக்கப்படுவதைக் கண்டு கோபம் கொண்டார். எப்படியாவது பள்ளி சென்று படிக்க வேண்டும் என்ற அவரது ஆசையை, அவர் தந்தை நாராயணசாமி நிறைவேற்றி வைத்தார். பெண்கள் பொதுப் பள்ளிகளில் ஆண்களோடு சேர்ந்து அமர்ந்து படிக்க, பள்ளி அனுமதிக்கவில்லை.

மன்னர் கல்லூரி முதல்வரான நாராயணசாமி சிறப்பு அனுமதி பெற்று ஒற்றைப் பெண்ணாக முத்துலட்சுமி ஒரு புறமும் திரைக்குப் பின் மாணவர்கள் மறுபுறமும் அமர்ந்து படிக்க ஏற்பாடானது.

**அவர் பார்த்த உறவுப் பெண்கள் பலர் இளம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டுச் சரியாக மருத்துவம் பார்க்கப்படாமல் இறந்து போனதைக் கண்ட முத்துலட்சுமி மனம் பதைத்தார்.**

பாடங்களைப் படிப்பதில் முத்துலட்சுமி காட்டிய தீவிரம் ஆசிரியர்களுக்கு வியப்பளித்தது. அவர்களும் அவருக்கு ஊக்கமளித்தனர். அத்தனையும் அவர் பருவமடையும் வரைதான். வயதுக்கு வந்த பெண் பள்ளிக்குப்போய் அதுவும் ஆண்பிள்ளைகளுடன் சேர்ந்து படிப்பதா என்று ஊரே எதிர்ப்பு தெரிவித்ததால், அதன் பிறகு பள்ளி இறுதி வகுப்புவரை வீட்டிலிருந்தே படித்தார்.

### முதல் பெண் மருத்துவர்

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து அறுவை சிகிச்சை மருத்துவராக வேண்டும் என்று ஆசைப் பட்டார் . அதற்கு முன் இளநிலைப் படிப்புக்காக மன்னர் கல்லூரிக்கே விண்ணப்பித்தார். சமூக வழக்கம் என்ற தடை அங்கும் குறுக்கே நின்றது. ஆனால், புதுக்கோட்டை அரசர் தொண்டைமான் அவர்கள் முத்துலட்சுமியின் ஆர்வத்தைப் பாராட்டி, அவருக்கு ஆதரவும் ஊக்கமும் உதவித் தொகையும் அளித்தார்.

அதன்பின்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் முதல் பெண்ணாக மருத்துவம் படிக்க நுழைந்தார். 1912 -ஆம் ஆண்டு மருத்துவர் பட்டமும் தங்கப் பதக்கமும் பெற்றார். இங்கிலாந்தில் உயர் கல்வி கற்றார். முற்போக்கு எண்ணங்களும் எளியவர்கள் பால் இரக்கமும் கொண்ட மருத்துவர் சுந்தர் ரெட்டியை காதல் மணம் புரிந்தார். இந்தியாவுக்குத் திரும்பி புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராகப் பணியாற்றினார்.

### பெண்களைக் கொன்ற பால்வினை நோய்

இளம் வயதிலேயே சாதிகளைத் தாண்டி மணம் செய்து கொண்டதால் தன் பெற்றோர் பட்ட இன்னல்களைப் பார்த்து வளர்ந்த முத்துலட்சுமி, வளரும்போதே கல்வியோடு சேர்ந்து சமூக அறிவியலையும் அலசி ஆராய்ந்தார். அவர் பார்த்த உறவுப் பெண்கள் பலர் இளம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டுச் சரியாக மருத்துவம் பார்க்கப்படாமல் இறந்து போனதைக் கண்ட முத்துலட்சுமி மனம் பதைத்தார்.

அவர்களைக் கொன்றது பால்வினை நோய் என்று அறிந்தபோது அவர்கள் எப்படி அந்த இளம் வயதில் பாலியல் உறவுக்கு உள்ளாக்கப் பட்டார்கள் என்று கொதித்தெழுந்தார். தேவதாசிப் பெண்களின் வாழ்க்கையில் இருந்த அவலங்களை நீக்க வேண்டுமானால், அவர்கள் பொட்டுக் கட்டப்பட்டு கோயில்களில் விடப்படும் கொடிய வழக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தார்.

### சட்டத்துக்குச் சட்டமன்றத்தில் எதிர்ப்பு

மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது அவருக்கு காங்கிரஸ் இயக்கத்திலும் காந்தியக் கொள்கைகளிலும் ஈடுபாடு ஏற்பட்டது. அன்னி பெசன்ட் அம்மையாரையும், கவிஞர் சரோஜினி நாயுடுவையும் தனக்கு முன்னோடிகளாகக் கொண்டு 'இந்தியப் பெண்கள் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார்.

எந்த அவையிலும் பெண்களின் உரிமைகளைத் தயக்கமின்றி எடுத்துரைத்த முத்துலட்சுமி அம்மையார் 1927-ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டசபையின் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினரானார். அன்று முதல் தனது நெடுநாள் இலக்கான தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்ற இடைவிடாது முயன்றார். அவரது முயற்சிக்குக் காங்கிரஸ் தலைவர்களில் பலர் ஆதரவு தெரிவித்தாலும், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராயிருந்தவர்கள் குறிப்பாக, அம்மையார் பிறந்த அதே புதுக்கோட்டையைச் சேர்ந்த சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

### சனாதன வழக்கத்தை நொறுக்கிய சட்டம்

அந்நிலையில் தந்தை பெரியாரின் முழுமையான ஆதரவும் சுயமரியாதை இயக்கத்தின் முழு மூச்சான பிரச்சாரமும் முத்துலட்சுமி அம்மையாரின் முயற்சிக்குப் பெரும் துணையாக நின்றன. முத்துலட்சுமி அம்மையாரின் தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றத் தாமதமானதைக் கண்டித்து 30.10.1927, 23.03.1930, 30.3.1930 ஆகிய தேதிகளில் 'குடிஅரசு' இதழில் எழுதப்பட்ட தலையங்கங்கள் தந்தை பெரியாரின் அறச்சீற்றத்தை வெளிப்படுத்தின.

இப்பெரும் போராட்டம் பல்வேறு தடைகளைத் தாண்டி 1947-ஆம் ஆண்டின் 31-வது சட்டமாக தமிழ்நாடு தேவதாசிகள் அர்ப்பணிப்புத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அது 17.1.1948 அன்று கவர்னர் - ஜெனரலின் ஒப்புதலைப் பெற்று அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. சனாதனிகளின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றியது முத்துலட்சுமி அம்மையாரின் சாதனையாகும்.

### திட்டங்களுக்குப் பெயரும் திருவுருவச் சிலையும்

இதைத் தவிர வாழ்க்கையில் போராட வேண்டிய நிலையில் இருக்கும் பெண்களுக்காக அவர் உருவாக்கிய 'அவ்வை இல்லமும்' 'அடையாறு புற்றுநோய் மருத்துவமனையும்' அவரது புகழுக்கு மேலும் மெருகேற்றின.

தனது இலக்கு நோக்கி இறுதிவரை ஓயாது பணியாற்றிய முத்துலட்சுமி அம்மையார் 1968-ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாள் காலமானார். அம்மையாருக்கு இரண்டு மகன்கள் . ஒருவர் கிருஷ்ணமூர்த்தி, மற்றவர் இராம் மோகன். இருவரும் மருத்துவர்கள்.

தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவரான அம்மையாரின் பணிகளைப் பாராட்டி அவருக்குப் 'பத்மபூஷன்' விருது வழங்கியது இந்திய ஒன்றிய அரசு. அவரது போராட்டத்தின் நோக்கத்தை அற உணர்வோடு ஆதரித்தது திராவிட இயக்கம். முத்துலட்சுமி அம்மையாரின் முயற்சிக்கு சுயமரியாதை இயக்கமும், தந்தை பெரியாரும் அதனைக் களப்பணியாகக் கொண்டு செயலாற்றிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் துணை நின்றது வரலாறு.

அது போலவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களுக்கு முத்துலட்சுமி அம்மையாரின் பெயர் சூட்டப்பட்டது.

குறிப்பாகக் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சத்துணவுக்காக உதவித்தொகை வழங்கப்படும் திட்டத்தை அம்மையார் பெயரில் அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 2023 மே மாதம் மருத்துவர் முத்துலட்சுமி அம்மையாரின் முழு உருவச்சிலையை அவர் பிறந்த புதுக்கோட்டை நகரில் அவர் பணியாற்றிய அரசு மருத்துவமனையில் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தார் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

(வருவார்கள்...)

---

## இளையோருக்கு கற்பிப்போம்!

**த**மிழ்நாட்டின் சமூக சீர்திருத்த வரலாற்றை இளம் தலைமுறைக்குக் கொண்டு செல்ல புதிதாக உதயமாகிறது 'சென்டர் ஃபார் இந்தியன் சோஷியல் ஸ்டடீஸ் (Centre for Indian Social Studies)' என்கிற அமைப்பு. நீதிக்கட்சித் தலைவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனைகளே இன்றைக்கு இந்தியாவின் தேவையாக உள்ளது என்பதை முன் வைக்கிறது இந்த அமைப்பு.

முதற்கட்டமாகத் திராவிடச் சிந்தனைகளைப் பேசும் நூறு சிறு நூல்களைப் பிற மொழிகளுக்கு மொழியாக்கம் செய்து வெளியிட உள்ளனர். திராவிடத் தலைவர்களின் எழுத்துகள், பத்திரிகைகள் ஆகியவற்றை மின்னணு வடிவில் சேமித்த 'டிஜிட்டல் பெரியார் (DIGITAL PERIYAR)' என்கிற இணையதளத்தையும் கொண்டு வருகின்றனர். வரும் 23- ஆம் தேதி, சென்னையில் இந்த அமைப்பின் தொடக்க விழாவில் திட்டக் குழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன், கொல்கத்தாவைச் சேர்ந்த பேரா.டெபி சட்டர்ஜி ஆகியோர் உரையாற்ற உள்ளனர். திராவிடச் சீர்திருத்தக் கருத்துகள் இந்தியா முழுவதும் தீயாகப் பரவட்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### மின்சாரத்துக்காக சிறை!

**த**லைவர் கலைஞர் 3-வது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற 1989-ஆம் ஆண்டு அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார் . அதற்கு அடுத்து வந்த ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இல்லாமல் செய்தது. இதை எதிர்த்து 1993 ஆம் ஆண்டுத் தலைமைக் கழக ஆணைப்படி அமைச்சர் அண்ணன் க.பொன்முடி. அவர்கள் தலைமையில் விழுப்புரத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு 15 நாட்கள் சிறை சென்றோம்.



கலிவரதன்

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அ.தி.மு.க அத்தகைய நடவடிக்கையைக் கைவிட்டது. விடுதலையானதும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தலைவர் கலைஞர் சால்வை அணிவித்துப் பாராட்டினார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-மு.கலிவரதன், பில்லூர் கிளைக் கழகச் செயலாளர், விழுப்புரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### விடுதலைப் போராட்டங்களின் வரலாறு!

**1958-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் கோவை மாவட்ட தி.மு.க.வின் மூன்றாவது மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் இரண்டாம் நாளில் 'விடுதலைப் போராட்டங்கள்' என்கிற தலைப்பில் கலைஞர் உரையாற்றினார். தென் ஆப்பிரிக்க நாடான கானா விடுதலை பற்றியும் அங்கேரி, அல்ஜீரியா நாடுகளின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டு ஒவ்வொரு நாட்டிலும் விடுதலைப் போராட்டம் கனல் பற்றி எரிகிற நேரத்தில்தான் நம்முடைய விடுதலை ஒலியும் எழும்புகிறது என உரையாற்றினார். இந்த உரை தொண்டர்களுக்குப் புதிய உத்வேகம் அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 246




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131